தினமலர்
உண்மையின் உரைகல்

# பூமியின் மகத்துவம், தத்துவங்களை நாட்டியத்தில் அபிநயத்த பாலாதேவி

'மா – வெளிப்புற உண்மை' என்ற பொருளில், பிரபல நாட்டிய கலைஞர் பாலாதேவி சந்திரசேகர், மயிலாப்பூர் தக்ஷிணாமூர்த்தி ஹாலில், தன் நாட்டிய நிகழ்ச்சியை நிகழ்த்தினார்.


பாலாதேவி

பூமி தாயாக, அனைத்து உயிர்களுக்கும் உயிர் அளிக்கும் ஜனனியாக தோன்றி, புவி உலகின் தோற்றத்தையும், அதில் அடங்கியுள்ள தத்துவங்களையும், தன் நடனத்தின் வாயிலாக விளக்கி, உணர்த்த ஆரம்பித்தார்.

மூல மந்திரமான பிரணவ மந்திரத்தின் தத்துவத்தை நடனத்தில் விளக்கியது அனைவரையும் வெகுவாக கவர்ந்தது.

அதாவது, அகாரத்தின் வடிவம் விஷ்ணு, உகாரத்தின் வடிவம் பிரம்மன், மகாரத்தின் வடிவம் சங்கரன். இவற்றின் சர்வம் ஓம்காரம் என்பதையும், பிரணவாகரத்தின் முழு வடிவமான கணபதியை மல்லாரியோடு வணங்கி, பிரணவத்தை எளிமையாய் விளக்கினார்.

காமதேனு, தேவலோகத்தில் வசிக்கும் ஒரு தெய்வீக பசு. கேட்பதை தரும் சக்தி படைத்தவர். இந்த காமதேனு, யுகங்களின் மாறுதல்களுக்கு இணங்கி இருப்பதை விளக்கினார்.

அடுத்ததாக, அர்த்த நாரீஸ்வரர் வடிவத்தை விளக்கினார். ஒருபாதி ஆணாகவும், ஒருபாதி பெண்ணாகவும் இருப்பதை காட்டி, பிரபஞ்சத்தில் அனைத்தும் சமமாக இருக்க வேண்டும் என்பதை, நாட்டியத்தில் காட்சிப்படுத்தினார்.

பின், பூமாதேவியை சிறைபிடித்த இரண்யாட்சனை, வராஹ அவதாரம் எடுத்து விஷ்ணு அழித்து, பூமாதேவியை மீட்டியது காட்டப்பட்டது.

தொடர்ந்து, 'சூடிக் கொடுத்த சுடர்கொடியாள்' நிகழ்வு காட்டப்பட்டது.

கோதை, எம்பெருமானுக்கு தன் கைகளால் கோர்க்கப்பட்ட துளசிமாலையை, தான் அணிந்து பார்த்து அவருக்கு சமர்ப்பித்து, எம்பெருமான் அதில் மகிழ்ந்த நிகழ்வை அழகுற விளக்கி, கோதை சூடி கொடுத்த சுடர்கொடியாக பெயர் பெற்றதை நினைவு கூர்ந்தார்.

அடுத்ததாக, பூமியின் தனித்துவம் மற்றும் மகத்துவத்தை விளக்கிய காட்சியமைப்பு இடம் பெற்றிருந்தது.

ஓர் உயிரோ, பல உயிரோ அனைத்தும், பூமியின் பிள்ளைகளே. இவை அனைத்துக்கும் ஆதாரமாய் இருக்கும் பூமி தாயே உமக்கு மங்களம் என, பூமாதேவியை வணங்கி, தன் நாட்டிய நிகழ்வை தனித்துவத்துடன் நிறைவு செய்தார்.

இவர், தன்னுடைய இசை அமைப்பிற்கு சுமநேச நந்தினி, சந்தரஜோதி போன்ற ராகங்களையும், மாத்ருபக்ககம் வாசுதேவ குடும்பகம் போன்ற நூல்களின் வரிகளையும் கொண்டு அமைத்திருந்தது, மேலும் சிறப்பாக இருந்தது.

– மா.அன்புக்கரசி